# சுற்றுலாத்துறையின் விருத்தியினால் மக்கள் எதிர்நோக்குகின்ற சூழல் மற்றும் சமூகப் பிரச்சினைகள்; நுவரெலியா பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு

**M. Majidha Banu**
South Eastern University of Sri Lanka
majidhabanu@yahoo.com

**ஆய்வுச் சுருக்கம்:**

உலகில் மிக வேகமாக முன்னேறி வரும் துறைகளுள் சுற்றுலாத் துறையும் ஒன்றாகும். இந்த வகையில் ஒரு நாட்டின் பொருளாதார விருத்தியில் இதன் பங்களிப்பு இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. இன்று உலக மக்கள் எதிர்நோக்குகின்ற பல்வேறுபட்ட சவால்களில் சுற்றுலாத்துறையின் விருத்தியினால் அப்பிரதேச மக்கள் எதிர்நோக்குகின்ற சூழல் மற்றும் சமூகப் பிரச்சினைகள் முக்கியமானவையாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இந்த வகையில் இலங்கையின் மத்திய மாகாணத்தில் குளிர்க்கால நிலையைக் கொண்டமைந்த நுவரெலியாப் பிரதேசமானது ஆரம்ப காலம் தொட்டு இன்று வரை சுற்றுலாத் துறையில் அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் பிரதேசமாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளதுடன் விவசாயத்துக்கு அடுத்தபடியாக அதிக வருமானத்தை ஈட்டித்தரும் தொழிலாகவும் இது காணப்படுகிறது. இதன் காரணமாக இங்கு வாழும் மக்கள் பல்வேறு சூழல் மற்றும் சமூக பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். இந்த வகையில் இவ்வாய்வின் நோக்கமானது நுவரெலியா பிரதேச மக்கள் சுற்றுலாத் துறையின் விருத்தியினால் எதிர்நோக்குகின்ற சூழல் மற்றும் சமூக பிரச்சினைகளை அடையாளம் காண்பதும், ஆய்வுப் பிரதேசத்தில் சமூக, சூழல் பாதிப்புகளை ஏற்படுத்துவதில் சுற்றுலாத்துறையின் பங்களிப்பினை இணங்காணுதல் மற்றும் அதற்கான தீர்வுகளை முன்வைப்பதுமாகும். இந்த ஆய்வானது முதலாம் நிலை மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளை மையமாகக் கொண்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளது. முதலாம் நிலைத் தரவுகளாக கள ஆய்வு, நேர்முகம் காணல், நேரடி அவதானிப்பு, வினாக்கொத்துக்கள் என்பன பயன்படுத்தப்பட்டன. நுவரெலியா பிரதேசசெயலகப் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் எளிய எழுமாற்று முறை மூலம் 100 வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டன. இரண்டாம் நிலைத் தரவுகளாக நுவரெலியா பிரதேச செயலகப் பிரிவின் அறிக்கைகள், சஞ்சிகைகள், புள்ளிவிபரத் திரட்டுக்கள், ஆய்வுக் கட்டுரைகள், இணையம், Google Earth என்பன மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டன. இத்தரவுகள் பண்புசார் மற்றும் அளவுசார் பகுப்பாய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டன. இதற்கு SPSS, MS Excel, GIS போன்ற மென்பொருட்கள் பயன்படுத்தப்பட்டன. இவ்வாய்வின் மூலமாக கலாசார சீரழிவுகள், குற்றச்செயல்கள் அதிகரிப்பு, வாழ்க்கை முறைகள் பாதிப்படைதல், மனித உரிமை மீறல்கள் அதிகரித்தல், சுகாதாரப் பிரச்சினைகள், நகராக்கம் மற்றும் வீதி விபத்துக்கள் அதிகரிப்பு போன்ற சமூகரீதியான பிரச்சினைகளும் அதிகரித்த திண்மக்கழிவுகளின் வெளியேற்றம் காரணமாக நீர் மாசடைதல், நிலம் மாசடைதல், உயிர்ப்பல்வகைமை பாதிப்படைதல், இயற்கை அழகு பாதிப்படைதல், பாரம்பரிய தளங்கள் மாற்றமடைதல் போன்ற சூழல் ரீதியிலான பிரச்சினைகளும் அடையாளம் காணப்பட்டன. எனவே இப்பிரதேச மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி இவ்வாறான பிரச்சினைகளை இழிவளவாக்குவதற்கு நடவடிக்கைகளை எடுப்பது காலத்தின் தேவையாக உள்ளது.

***பிரதான சொற்கள்**: அந்நியசெலாவனி, உயிர்ப்பல்வகைமை, சுற்றுலாத்துறை*


## 1. அறிமுகம்

சுற்றுலாத்துறையானது இன்று வளர்ச்சியடைந்த நாடுகளில் மட்டுமன்றி வளர்முக நாடுகளிலும் காணப்படும் பொருளாதார வளர்ச்சிக்கான உள்ளார்ந்த ஆற்றலைக் கொண்டிருக்கும் ஒரு துறையாகும். பொருளாதார அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு செயற்படுகின்ற இலங்கை அரசாங்கம் அதற்காக தெரிவுசெய்துள்ள

துறைகளில் சுற்றுலாத் துறையும் முக்கிய இடத்தை வகித்து வருகின்றது. இலங்கையின் சுற்றுலாத்துறை வளர்ச்சியினை சர்வதேச உல்லாசப்பிரயாண அமைப்பு (WTO) பின்வருமாறு விபரிக்கின்றது. “ இலங்கை கடந்துகொண்டிருக்கும் தசாப்தத்தில் உலகளாவிய சுற்றுலாக் கைத்தொழில் தொடர்ச்சியாக வளர்ச்சி கண்டு வரும் ஒரு துறை என எதிர்பார்க்கப்படுகின்றது. ஏனெனில் அந்தளவுக்கு இலங்கை உல்லாச வாய்ப்புக்களையும் இயற்கை எழில்மிகு மூலவளங்களையும் கொண்டு மிளிர்கின்றது. ” (யாழ்ப்பாணப் புவியியலாளன்: 2000)

இலங்கை பன்னெடுங்காலமாக வெளிநாட்டவர்களை தன்பால் கவர்ந்திழுக்கும் ஒரு நாடாகத் திகழ்கின்றது. வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொடக்கம் இலங்கையில் பல்வேறு பிரயாணிகள் வந்து செல்கின்றனர். இலங்கையின் அமைவிடமும், அதன் பௌதீக அமைப்பும் இதற்கு காரணமாக அமைகின்றன. இலங்கையில் பரந்தளவு கைவினைத்திறன்கள், செயற்பாட்டுக் கலைகள், விழாக் கொண்டாட்டங்கள், ஆயுள்வேத மருந்துகள், சமையற் கலைகள், சம்பிரதாயங்கள், மரபுகள் என்பனவும் அதற்கான முக்கிய உற்பத்தித் தளமாக விளங்குகின்றது.

## 2. ஆய்வுப்பிரதேசம்




உலக சுற்றுலா நிறுவனத்தினால் அடையாளம் காணப்பட்ட உலகிலுள்ள 302 பிரதேசங்களில் இலங்கையின் 6 இடங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்றாக நுவரெலியா காணப்படுகின்றது. இந்த வகையில் மத்திய மலைநாட்டின் குளிர்க்காலநிலையை தனக்கே உரித்தான இயல்பாகக் கொண்டு உயரமான மலைகளுக்கு நடுவே கடல்மட்டத்திலிருந்து 1868m உயரத்தில், வடக்கே $6^0$ 58′ 0″ யையும் கிழக்கே $80^0$ 46′ 0″ இனையும் கொண்டு, சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய பல சுற்றுலா மையங்களைக் கொண்டமைந்த பிரதேசமாக நுவரெலியாப் பிரதேசம் அமையப்பெற்றுள்ளது. இப்பிரதேசமானது வருடாந்த வெப்பநிலையாக $16^0$c இனையும் வருடாந்த மழைவீழ்ச்சியாக 2000 mm இனையும் பெற்றுக்கொள்கின்றது.

பல்லின மக்கள் ஒன்றிணைந்து வாழக்கூடிய இப்பிரதேசமானது 249166 சனத்தொகையைக் கொண்டுள்ளது. (நுவரெலியா பிரதேசசெயலகப் பிரிவின் மூலவளத் திரட்டு) நுவரெலியா நகரமே இலங்கையின் உயரமான இடத்தில் அமைந்துள்ள மாநகரமாகும். அத்துடன் சூழல் சுற்றுலாவை மேற்கொள்ளும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இயற்கைக் காட்சிகளும் குளிர்க் காலநிலையும் சுற்றுச் சூழல் அம்சங்களும் இப்பிரதேசத்திற்கே உரிய அடையாளங்களாகக் காணப்படுகின்றன. இத்தகைய கண்களைக் கவரும் இயற்கைக் காட்சிகள்

சுற்றுலாப் பயணிகளை ஈர்த்தெடுக்கின்றன. எனவே தான் வருடம் தோறும் 500 000 சுற்றுலாப் பயணிகள் இங்கு வருகை தருகின்றனர். இவர்களில் 587 473 பேர் உள்நாட்டவர்களாகவும், 12 489 பேர் வெளிநாட்டவர்களாகவும் காணப்படுகின்றனர். (வருடாந்த செயற்றிறன் அறிக்கை 2012) இது அந்நியசெலாவனியை ஈட்டித்தரக்கூடிய ஒன்றாக அமையப்பெற்றுள்ளது.

## 3. ஆய்வுப் பிரச்சினை

இத்தகைய சுற்றுலாத்துறையின் விருத்தியானது சாதகமான தன்மைகளைக் கொண்டிருப்பதுடன் பாதகமான நிலைமைகளையும் கொண்டிருக்கத் தவரவில்லை. எனவே தான் இச்சுற்றுலாத் துறையானது நுவரெலியாப் பிரதேசத்தில் சூழலியல், சமூக தாக்கங்களை வெகுவாக ஏற்படுத்தி வருகின்றன. இந்த வகையில் சூழல் தாக்கங்களை நோக்கும் போது அதிகரித்த திண்மக்கழிவுகளின் வெளியேற்றம் காரணமாகவும் முறையற்ற கழிவு நீரின் வெளியேற்றம் காரணமாகவும் நீர், நிலம் என்பன மாசாக்கத்திற்கு உட்படுகின்றன. இவ்வாறு திண்மக்கழிவுகளை முறையாக வெளியேற்றாத காரணத்தினால் அப்பிரதேசத்தில் வாழ்கின்ற உயிர்ப்பல்வகைமை அழிவுக்குள்ளாகி வருகின்றன. இவை அனைத்தும் பாதிக்கப்படுகையில் இயற்கை அழகு பாதிப்படைகின்றன. இன்னும் பொருளாதார விருத்தியை மேம்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டு பாரம்பரிய தளங்கள் மாற்றமடைந்து வருகின்றன.

சமூக தாக்கங்களை நோக்கும் போது பல்லின மக்கள் ஒன்றினைந்து வாழும் இப்பகுதியில் வேறுபட்ட கலாச்சாரங்களை உடையவர்களின் வருகையின் காரணமாக கலாசார சீரழிவுகள் அதிகம் இடம்பெறுவதுடன் மக்களின் வாழ்க்கை முறைகளில் அதிக பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் குற்றச்செயல்கள் அதிகரிப்பு இடம்பெற்றுள்ளதாகவும் இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்டது. இன்னும் அதிகரித்த போக்குவரத்து வீதிவிபத்துக்களை அதிகரிக்கச் செய்துள்ளது. இன்னும் கழிவுநீர் வெளியேற்றம் காரணமாக நோய்கள் அதிகம் ஏற்பட்டுள்ளதாகவும் இவ்வாய்வின் மூலம் அறியப்பட்டுள்ளது.

## 4. ஆய்வின் நோக்கம்

### 4.1 பிரதான நோக்கம்

சுற்றுலாத் துறையின் விருத்தியின் காரணமாக ஏற்படும் சூழல் மற்றும் சமூக பாதிப்புக்களை அடையாளம் காணுதல் இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும்.

### 4.2 துணை நோக்கங்கள்

1.ஆய்வுப் பிரதேசத்தில் சமூக, சூழல் பாதிப்புகளை ஏற்படுத்துவதில் சுற்றுலாத்துறையின் பங்களிப்பினை இணங்காணுதல்.
2. அதனை தீர்ப்பதற்கான ஆலோசனைகளை முன்வைத்தல்.

## 5. ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது பண்பு ரீதியானதும், அளவு ரீதியானதுமான ஆய்வாக அமைவதால் நுவரெலியா பிரதேசத்தில் சுற்றுலாத் துறையின் மூலம் ஏற்படும் சமூக, சூழல் பாதிப்புக்களை கண்டறிய தேவையான தரவுகளும் தகவல்களும் முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவு மூலங்களில் இருந்து பெறப்பட்டுள்ளது.

### 5.1 தரவு சேகரிப்பு

#### 5.1.1 முதலாம்நிலைத் தரவுகள்

முதலாம்நிலைத் தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக கள ஆய்வு, நேர்முகம் காணல், நேரடி அவதானிப்பு, வினாக்கொத்து முறைமை என்பன பயன்படுத்தப்பட்டு தேவையான தகவல்கள் சேகரிக்கப்பட்டன. குறிப்பாக நுவரெலியா பிரதேசத்தில் வாழும் 249166 பேரிலிருந்து எளிய எழுமாற்று முறையின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட சுமார் 100 பேரிடம் வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு தகவல்கள் பெறப்பட்டன. அத்துடன் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆய்வுத் தலைப்போடு தொடர்பான 3 நபர்களுடன் (ஆய்வுப்பிரதேச சுற்றுலாத்துறை வழிகாட்டிகள்) இடம்பெற்ற நேர்காணல் ஊடாகவும் ஆய்வுக்குத் தேவையான தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

#### 5.1.2 இரண்டாம்நிலைத் தரவுகள்


மேலும் இரண்டாம் நிலைத் தரவுகளாக ஏற்கனவே வெளியிடப்பட்ட ஆய்வுகளின் உட்பரிமாணங்கள், நுவரெலியா பிரதேச செயலகப் பிரிவின் காரியாலய அறிக்கைகள், சஞ்சிகைகள், புள்ளிவிபரத் திரட்டுக்கள், இணையம் என்பன மூலம் தகவல்கள் பெறப்பட்டு இவ்வாய்வு வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டது.

### 5.2 தரவுப்பகுப்பாய்வு

சேகரிக்கப்பட்ட தகவல்கள் அனைத்தும் எளிய புள்ளிவிபரவியல் முறையான SPSS இனைப் பயன்படுத்தியும் இன்னும் MS EXCEL, Arc GIS போன்ற மென்பொருட்களும் பயன்படுத்தப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டு, படங்கள் வரையப்பட்டு பெறப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் இவ் ஆய்வின் நோக்கங்கள் அடையப்பெற்றுள்ளன.


## 6. பெறுபேறுகளும் முடிவுரையும்

நுவரெலியா பிரதேச சுற்றுலாத் துறையானது இலங்கையின் பொருளாதார விருத்தியில் பாரிய பங்களிப்பை செய்வதாக அமைந்திருப்பினும் கூட சூழல் ரீதியிலும், சமூக ரீதியிலும் பல பாதகமான விளைவுகளை அடையப்பெற்றுள்ளமை இவ்வாய்வின் ஊடாக கண்டறியப்பட்ட உண்மையாகும். இந்த வகையில் நுவரெலியா பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வின்படி வருடாந்தம் 500 000 இற்குட்பட்ட (வருடாந்த செயற்றிறன் அறிக்கை 2012) சுற்றுலாப் பயணிகள் இப்பகுதிக்கு வருகை தருகின்றனர். இவ்வதிகரித்த சுற்றுலாப் பயணிகளின் வருகையின் காரணமாக ஏற்படுகின்ற சூழல் மற்றும் சமூகப் பாதிப்புக்களை பின்வரும் படம் காட்டுகின்றது.




Source: Field Data Collection 2016


இந்த வகையில் சுற்றுலாத்துறையின் விருத்தியானது சூழல் பாதிப்புகளையும் சமூகப் பாதிப்புகளையும் ஏற்படுத்தினாலும் சூழல் பாதிப்புகளே அதிகம் இதம்பெறுவதாக தகவல்கள் சுட்டிக்காட்டுகின்றன. இதற்கு திண்மக்கழிவுகளின் வெளியேற்றமே பிரதான காரணியாகத் திகழ்கின்றது. மேலும் ஆய்வின் மூலம் கண்டறியப்பட்ட சூழல் பாதிப்புகளின் விபரத்தினை பின்வரும் படம் காட்டி நிற்கின்றது.




Source: Secondary and Field Data Collection 2016

இதன்படி அதிகளவான சூழல் பாதிப்புக்களாக நிலம் மாசடைதல், நீர் மாசடைதல் என்பன வெகுவாக இடம்பெறுவதாக மக்கள் கருத்துக்கள் மூலமாக அறிய முடிந்தது. இவை இடம்பெறுவதற்கு முறையற்ற விதத்தில் வெளியேற்றப்பட்ட திண்மக் கழிவுகள், கழிவு நீர் என்பனவே காரணமாக அமைந்தன. இதன் காரணமாக உயிர்ப்பல்வகைமையும் அழிவடைந்து வருவதாக கண்டறியப்பட்டுள்ளது. இன்னும் சூழலை அழகுபடுத்தக் கூடியதும், அரிய வகையினதுமான தாவர இனங்கள் அழிவடைந்து வருவதாகவும் தகவல்கள் பெற

முடிந்தன. இத்தகைய செயற்பாடுகள் காரணமாக சுற்றுலாத்துறைக்கு அடிப்படையாகத் திகழும் சுற்றுச் சூழலின் இயற்கை அழகு பாதிப்படைவதாகவும் மக்கள் கருத்துக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.
நுவரெலியா பிரதேச சுற்றுலாத் துறையானது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவரக்கூடிய பிரதேசமாகத் திகழ்கிறது. இத்தகைய இயற்கை அழகினை பார்வையிடுவதற்காக வேறுபட்ட கலாசார மக்கள் இப்பகுதிக்கு வருகை தருகின்றனர். எனவே தான் இதனால் சமூக ரீதியான பாதிப்புக்களையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது. அவற்றைப் பின்வருமாறு நோக்கலாம்.




Source: Field Data Collection 2016

வேறுபட்ட கலாசார மக்களின் வருகையின் காரணமாக இப்பகுதிக்கே உரித்தான கலாசாரப் பண்புகள் வெகுவாக மாற்றமடையக் காரணமாக அமைவதாக அதிகமான மக்கள் கருத்துக்கள் தெரிவிக்கின்றன. குடி மற்றும் ஏனைய போதை வஸ்துக்களின் பாவனை அதிகரிப்பு, ஆடை அலங்காரங்களில் மாற்றம், இதர குற்றச்செயல்களின் அதிகரிப்பு காரணமாக இப்பகுதி மக்களின் வாழ்க்கை முறைகள் வெகுவாக பாதிக்கப்பட்டு வந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.
இப்பகுதியில் போக்குவரத்துப் பாதைகள் விருத்தி செய்யப்பட்டுள்ள நிலையில் சுற்றுலாத் துறையை மையமாகக் கொண்டு அதிகரித்த வாகனப் போக்குவரத்து இடம்பெறுகின்றன. இதன் காரணமாகவும் குளிர் மற்றும் பனிபடர்ந்த காலநிலையின் காரணமாகவும் அதிகரித்த வீதி விபத்துக்கள் இடம்பெறுவதாகவும் 18 வீதமான மக்கள் கருத்துக்களின் மூலமாக கண்டறியப்பட்டுள்ளது. மக்களின் கவனக்குறைவே இதற்கு மிகப்பிரதான காரணமாகும் என கருத்துகள் சுட்டிக்காட்டுகின்றன. அத்துடன் பல்வேறுபட்ட மக்களின் வருகையானது இப்பகுதியில் தொற்று நோய்கள் மற்றும் இதர நோய்களை வெகுவாக ஏற்படுத்தி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இந்த வகையில் ஆய்வுப் பிரதேச சுற்றுலாத் துறையினை கவனத்தில் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வு பின்வரும் சாத்தியமான விதந்துரைப்புகளை முன்வைக்க முனைகிறது. மக்கள் மத்தியில் சுற்றுச் சூழலை பாதுகாப்பதற்கான விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல், அபிவிருத்தி செயற்பாடுகளை

மேற்கொள்ளும் போது மத்திய சுற்றாடல் அதிகாரப் பிரிவின் கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளல், குற்றச் செயல்களை மேற்கொள்வோர்களுக்கு எதிராக சட்டதிட்டங்களை மேற்கொள்ளல், அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்கையில் பாரம்பரிய தளங்கள் மாற்றமடையா வண்ணம் செயற்படல் போன்றவற்றை மேற்கொள்வதனூடாக சுற்றுலாத் தளங்களைப் பாதுகாப்பதுடன் அச்சமூகத்தையும் பாதுகாத்து, சுற்றுலாத் துறையை மென்மேலும் வளப்படுத்தலாம் என்பதே இவ்வாய்வின் பிரதான அடைவுகளாகும்.

### 7. உசாத்துணைகள்


1. Andrew Holden, 2000, Environment and Tourism, Rutledge Taylar & Francis Group, Londen and Newyork.
2. ஈஸ்வரன்.ச, (2006) சுற்றுலாவியல், பாவை பப்ளிகேசன், இராயப்பேட்டை, சென்னை-600014.
3. தங்கமணி, ம, (2000), சுற்றுலாவியல் ஓர் அறிமுகம், முத்துப்பதிப்பகம், புதுக்கோட்டை-62201.
4. அருண், ஆ, "சுற்றுலாத்துறை வளர்ச்சியில் இலங்கை எதிர்நோக்கி நிற்கின்ற சவால்கள்" , 27, புரட்டாதி, வீரகேசரி வெளியீடு, இலங்கை.
5. http://www.sltda.gov.lk/sri-lanka-touris-attractions(21/01/2011,12.22pm)
6. http:www.sillignakis.com/pdf/Rural-Tourism-Finall-ALL.pdf(02/02/2011,10.25am)